## கோவை மாநகரக் காவல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திரு. பிரதீப் குமார், இ.கா.ப.

ம.ந.கா.ஆ.எண்.20/2022.
ந.க.எண்.ஒ 1/30408/2019 நாள்: 03/01/2022

பொருள்: காவல் – கோவை மாநகர் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.ச.நவீன்குமார் த/பெ.என்.சந்திரசேகரன், மறைந்த தலைமை காவலர்.955 என்பவர் – கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை: 1)காவல் ஆணையாளர், கோவை மாநகரம் அவர்களின் கருத்துரு ந.க.எண். ஒ 1/30408/2020 நாள்.20.10.2020.

2)காவல் துறை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.E/756994/ சி.எ.ஆர்.-1/20 நாள். 06.11.2020.

3)அரசு கடித ந.க.எண்.49067/காவல்-15/2021-1, நாள்.26.11.2021.

4)தலைமை அலுவலகக் குறிப்பாணை கடித ந.க.எண். 756954/சி.ஏ.ஆர். /2020 நாள்.08.12.2021.

*********

**ஆணை:**

திரு.என்.சந்திரசேகரன், தலைமை காவலர். 955 என்பவர் கோவை மாநகர காவலில் பி-2 ஆர்.எஸ். புரம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த போது 25.02.2011 அன்று இரவு ரோந்து இருந்த போது, இரு சக்கர வாகனத்தில் சென்ற ஜெகன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டு சென்ற சிமென்ட் லாரியை தனது இரு சக்கர வாகனத்தில் விரட்டி பிடிக்கச் சென்ற போது அந்த லாரியின் ஓட்டுநர் வண்டியை நிறுத்தாமல் துரத்திச் சென்ற தலைமைக்காவலர் 955 திரு.என்.சந்திரசேகரனின் தலையின் மீது லாரியின் முன் சக்கரம் ஏறியதால் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். பணியில் இருக்கும் போது வீரதீர செயல்கள் மூலம் இயற்கை எய்தியதால் மரணம் அடைந்த தலைமைக்காவலரின் மூத்த மகன் திரு.ச.நவீன்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட வேண்டி

தலைமையலுவலகத்திற்கு கடந்த 24.04.2013 –ல் கருத்துரு அனுப்பப்பட்டது. தலைமை அலுவலகத்தில் இவரது பெயர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் வ.எண். 2261 ( வ.எண். 1530, தலைமை அலுவலகத்தால் 31.08.2019 வரை சரி செய்யப்பட்ட காத்திருப்போர் பட்டியலில்) வைக்கப்பட்டது.

2) மேற்குறிப்பிட்டுள்ளவாறு, 25.02.2011 இரவு ரோந்துப் பணியில் குற்றவாளியை பிடிக்கச் சென்ற போது அக்குற்றவாளியினாலேயே கொடூரமாக லாரி ஏற்றி கொலை செய்யப்பட்டு உயிரிழந்த கோவை மாநகர பி-2 ஆர்.எஸ். புரம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த திரு.என்.சந்திரசேகரன் த.கா 955, என்பவர் மரணத்தினை சிறப்பு நிகழ்வாகக் கருதி அரசாணை (நிலை) எண்.135, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.04.10.2006- க்கு விலக்களித்து அவரது மூத்த மகன் திரு.ச.நவீன்குமார் என்பவருக்கு அவரது தகுதியின் அடிப்படையில் காத்திருப்போர் பட்டியலில் வைக்காமல் முன்னுரிமை அளித்து கருணை அடிப்படையில் காவல்துறையில் உடனடியாக பணிநியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணை எண் (4 டி) எண்.40 உள் (காவல்.15) துறை , நாள்.05.09.2019 பிறப்பிக்கப்பட்டது.

3) அதன்படி மாநகர ஆணை எண் 1259/2019 ந.க.எண்.என்1/49488/2019, நாள்.30.10.2019- ன் படி 31.10.2019 முதல் இளநிலை உதவியாளராகப் பணிக்கு அறிக்கை செய்துபணிபுரிந்து வருகிறார்.

4) அவரது பணிவரன்முறைபடுத்துதல் தொடர்பாக கீழ்க்கண்ட விபரங்கள் தெரியப்படுத்தப்படுகிறது.

(i) திரு.ச.நவீன்குமார் என்பவரது பிறந்த தேதி.18.10.1993 ஆகும். இவர் இடைநிலைக் கல்வியில் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்.

5) மேலும் பார்வை -2 மற்றும் 3-ல் கண்டுள்ள தலைமையலுவலக மற்றும் அரசுக் கடிதப்படி அரசு நிலை எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (கியு1), நாள்.26.02.2021- ல் (5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் எந்தவித விதி தளர்வு ( Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ( Excemption of Govt. Orders) தேவைபடாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை படுத்தப்படுகிறது

என்று குறிப்பிட்டுள்ளதாகவும், எனவே இவ்வாணையினை செயல்படுத்த சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ( Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ( One level Higher than Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டில் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்ட தொடர்புடைய அரசுப்பணியாளரின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

6) மேலும், பார்வை 4-ல் கண்டுள்ள தலைமையலுவலகக் குறிப்பாணையில், மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின் படி பணிவரன்முறை செய்திடுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

7) எனவே, கோவை மாநகரில் பணியின் போது வீர மரணம் அடைந்த தலைமைக்காவலர் 955 திரு.என்.சந்திரசேகரனின் மூத்த மகன் கோவை மாநகர காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திரு.ச.நவீன்குமார் என்பவருடைய பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 31.10.2019 மு.ப முதல் பணிவரன்முறை படுத்தி ஆணையிடப்படுகிறது.

Pradip Kumar I P S.,
காவல் ஆணையர்,
கோவை மாநகரம்.

பெறுநர்

திரு.ச.நவீன்குமார், இளநிலை உதவியாளர்கள்,
மாநகர காவல் அலுவலகம்,
கோவை மாநகரம்.

நகல் : காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4.

நகல் : காவல் துணை ஆணையர், தலைமையிடம், கோவை மாநகரம்.

நகல் : முதுநிலை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரி (கணக்கு பொறுப்பு நிர்வாகம்), மாநகர காவல் அலுவலகம், கோவை மாநகரம்.

நகல் : முகாம் கண்காணிப்பாளர், காவல் ஆணையரின் முகாம் அலுவலகம், கோவை

மாநகரம்.

நகல் :அனைத்து கண்காணிப்பாளர்கள், மாநகர காவல் அலுவலகம், கோவை மாநகரம்.

நகல் : A3, B1, B2, C1, E1, F1, H1, J1, J2, L3, Y3, இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள், மாநகர காவல் அலுவலகம், கோவை மாநகரம்.

நகல் : மாநகர காவல் ஆணை புத்தகம்.